# ஈழத்து முற்போக்குக் கவிதை வளர்ச்சியில் புதிய தடம் அமைத்த தோழர் இஸ்மாயில்

யோகராசா, செ.*

**ஆய்வுச் சுருக்கம்**

சம்மாந்துறையைச் சேர்ந்தவரான தோழர் இஸ்மாயில் ஈழத்தின் முக்கியமான கவிஞர் புனைகதை எழுத்தாளர். எனினும் இவ்விதங்களில் வெளியுலகத்தில் அறியப்படாதவர் ஆய்வுக்கு உட்படுத்தப்படாதவர். இவ்விதத்தில் இவரது கவிதைகள் பற்றி ஆய்வு செய்கின்ற முதல் முயற்சியாக இது அமைகின்றது. ஈழத்தின் முதல் முற்போக்குக் கவிஞர் என்று கருதப்படக் கூடியவர் அ.ந. கந்தசாமி. இவர் சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளைச் சேர்ந்தவர். இவரது கவிதைப் போக்கில் அறுபதுகள் அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் கவிஞர் நு.ஃ.மான். நு.ஃ.மானது கவிதைகளின் வெளிப்பாட்டுமுறை தனித்துவமானது. மேற்கூறிய இரு கவிஞர்களதும் தடங்களின் வழிச்செல்லாது தனக்கென்றொரு தடம் அமைத்தவர் அறுபதுகளைச் சேர்ந்த தோழர் இஸ்மாயில். இது பற்றி இவ்வாய்வு விரிவாக எடுத்துரைக்கின்றது.

**பிரதான சொற்கள்:** புனைகதை, முற்போக்கு, வெளிப்பாட்டுமுறை, தடம்

To whom correspondence should be addressed: yogarajah11@gmail.com

*Professor, Department of Languages, Eastern University of Sri Lanka.